## 1.அமைப்பு

### 1. அமைப்பு வரையறு?

ஆலன் லூயி கூற்றுப்படி,

- " *செய்ய வேண்டிய பணியினை அறிந்து அதனை தொகுதிகளாகப் பிரித்தலும்,* **குறிக்கோள்களை அடைய பணியாளர்கள் பயன்தரும் முறையில் உழைக்கும் நோக்குடன்** *அவர்களுக்கிடையே உறவுமுறையை ஏற்படுத்தி பொறுப்பையும், ஆணை உரிமைகளையும்* **வரையறுத்து வழங்கலையும் அமைப்பு என்ற சொல் குறிக்கும்".**

### 2. தரவரிசை முறைக் கோட்பாடு என்றால் என்ன?

- ஆணைஉரிமையின் வரிசை உயர்மட்டத்திலுள்ள அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்திலுள்ள பணியாளர்கள் வரை படிப்படியாக கீழ்நோக்கி வர வேண்டும்.
- இதற்கு "கட்டளை இணைப்பு" என்றும் பெயர்.

### 3. தனி வணிக அமைப்பு என்றால் என்ன?

- ✓ இது பழமையான அமைப்பு.
- ✓ தனிநபர் முதலிட்டு மேற்கொள்ளும் தொழில்.
- ✓ வரும் இலாப நட்டம் முழுதும் அவரையே சாரும்.
- ✓ இவரது பொறுப்பு வரையறா பொறுப்பாகும்.

### 5. கூட்டாண்மை என்ற பதத்தினை விளக்குக.

"எல்லோருமோ, எல்லோர் பொருட்டு அவர்களுள் எவருமோ நடத்திவரும் தொழிலின், ஆதாயத்தை பகிர்ந்து கொள்ள உடன்பட்ட நபர்களிடையே நிலவும் உறவு கூட்டாண்மை."

### 6. "கர்த்தா" என்பவர் யார்?

- இந்து கூட்டு குடும்ப வணிகத்தை குடும்பத் தலைவர் மூலம் நடத்துவர்.
- இந்த தலைமை உறுப்பினரே "கர்த்தா" என்று அழைக்கப்படுவார்.

### 7. கூட்டுறவு அமைப்பு பற்றி நீ அறிவது என்ன?

- கூட்டுறவு என்பது நபர்கள் தாமாகவே அமைத்துக் கொள்ளும் சங்கமாகும்.
- கூட்டுறவு அமைக்க 25 நபர் தேவை.
- "ஒரு நபர் – ஒரு வாக்கு" கொண்ட அமைப்பு.
- சேவையே இதன் நோக்கம்.

### 8. பொதுக் கூட்டுரு என்றால் என்ன?

- இது பாராளுமன்ற தனி சட்டம் மூலம் உருவாக்கப்படுவது..
- இது ஒரு சட்டமுறை கழகமாகும்.
- இதன் நோக்கம் பொது மக்களுக்கு சேவை புரிவதாகும்.
- **(எ.கா)** இந்திய ரிசர்வ் வங்கி, LIC, UTI ஆகியவை.

### 9. வாரிய அமைப்பு பொருள் பற்றி கூறுக.

- அரசால் நியமிக்கப்படும் ஒரு குழுவால் மேலாண்மை செய்யப்படும் ஒரு அமைப்பு வாரிய அமைப்பு ஆகும்.
- இது தனிச்சட்டத்தால் ஒழுங்குபடுத்தப்படுகிறது..
- **(எ.கா.)** *தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,*

### 10. பன்னாட்டு நிறுமத்தின் 4 எடுத்துக் காட்டுகளைத் தருக.

1. யூனியன் கார்பைடு   2. IBM
3. பிலிப்ஸ்   4. கோகோ கோலா

**2.தனியாள் வணிகம்**

## 1) கூட்டுருவாக்கம் பெறாத அமைப்புகளின் வகைகளை கூறுக?

- தனியாள் வணிகம்
- கூட்டாண்மை வணிகம்
- இந்து கூட்டுக் குடும்பம்.

## 2) தனியாள் வணிகர் வரைவிலக்கணம் தருக

P.K. கோஷ் மற்றும் Y.K.பூஷன் கூற்றுப்படி, "தன் சொந்த மூலதனத்தை முதலீடு செய்து, தன் சொந்த திறனையும், நுண்ணறிவையும் பயன்படுத்தி, வியாபாரத்தின் இலாபநட்டங்களை தானே ஏற்றுக் கொள்ளும் ஒரு அமைப்பே தனிஆள் நிறுவனம் ஆகும்".

## 3) வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?

- தொழில் கடன்களுக்காக சொந்த சொத்துக்கள் பாதிக்கப்படும் பொறுப்பு. வரையறாப் பொறுப்பு.
- வியாபாரக் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லாவிட்டால், தனிவணிகர் தன் சொந்த சொத்துக்களிலிருந்தும் கடனீந்தோருக்கு செலுத்த வேண்டும்.

---

**பாடம்–3**

**கூட்டாண்மை**

## 1) கூட்டாண்மை வரைவிலக்கணம் தருக

இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932 பிரிவு 4ன் *படி "எல்லோரும் சேர்ந்தோ எல்லோருக்காக ஒருவரோ நடத்தும் தொழிலின் லாபத்தைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு"* ஆகும்.

## 2)கூட்டாண்மை நிறுவனத்தின் குறைந்தபட்ச, அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?

- கூட்டாண்மையில் கூட்டாளிகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை **இரண்டு,**
- அதிகபட்ச நபர்களின் எண்ணிக்கை, வங்கித் தொழிலாயின் ***பத்து,*** பிற தொழிலாயின் **இருபது** ஆகும்.

### 3) கூட்டாளிகளிடையே நிலவும் உறவுமுறை யாது?

- கூட்டாளிகளின் உறவு ஒப்பந்த உறவு ஆகும். பிறப்பின் காரணமாகவோ, தகுநிலை காரணமாகவோ இது உருவாவதில்லை.
- இந்தியாவில் கூட்டாண்மை சட்டத்தின் படி, கூட்டு வணிகம் ஒப்பந்தத்தால் ஏற்படுகிறது.
- உடன்பாடு கொள்ள சட்டப்படி தகுதி உடையவர்கள் மட்டுமே கூட்டாளிகளாக இருக்க முடியும். பித்தர், நொடிப்பு நிலையர் போன்றோர் கூட்டாளிகளாக முடியாது.

### 4) உழையா கூட்டாளி என்பவர் யார்?

- உழையா கூட்டாளிகள் தொழிலில் முதலிடுவர்.
- ஆனால் தொழில் நிர்வாகத்தில் பங்கு பெறுவதில்லை.
- இவ்வகை கூட்டாளிகள் உறங்கும் கூட்டாளிகள் என அழைக்கப்படுவர்.

### 5) வரையறுக்கப்பட்ட கூட்டாண்மை என்றால் என்ன?

- வரையறுத்த கூட்டாண்மையில் ஒரு கூட்டாளியின் பொறுப்பு கண்டிப்பாக வரையறாப் பொறுப்பாக இருக்கவேண்டும்.
- இந்தியாவில் இவ்வகை கூட்டாண்மைக்கு அனுமதி இல்லை. ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் அனுமதிக்கப்படுகிறது.
- ஒரு கூட்டாளி தவிர பிற கூட்டாளிகளின் பொறுப்பு வரையறு பொறுப்பாகும்.

**6) கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?**

- இந்தியாவில் கூட்டாண்மை உடன்பாடு வாய்மூலமாகவோ, எழுத்து வடிவிலோ இருக்கலாம்.
- கூட்டாண்மை பற்றிய விவரங்கள் அல்லது நிபந்தனைகள் எழுத்து வடிவத்தில் இருந்தால் அதுவே கூட்டாண்மை ஒப்பாவணம் எனப்படும்.

**7) ஒரு கூட்டாளியின் உட்கிடை ஆணையுரிமைக்கு வரைவிலக்கணம் தருக**

- அவசர காலங்களில் கூட்டாண்மையின் நலனை பாதுகாக்கும் பொருட்டு சில நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு கூட்டாளிக்கு வழங்கப்படும் உரிமைக்கு உட்கிடை ஆணையுரிமை என்று பெயர்.
- அது கூட்டாண்மையை கட்டுப்படுத்தும்.

**8) கூட்டு மற்றும் தனிபொறுப்பு என்றால் என்ன?**

- கடனீந்தோர் தங்களுக்கு சேரவேண்டிய மொத்த கடன் தொகையையும் அனைத்து கூட்டாளிகளின் தனிச் சொத்துக்களிலிருந்து கோரி பெறலாம். இது *கூட்டுப்பொறுப்பு.*
- அல்லது, ஏதேனும் ஒரு கூட்டாளியின் தனி சொத்துக்கள் மீது வழக்கு தொடுத்து பெற்றுக் கொள்ளலாம். இது *தனிப்பொறுப்பாகும்.*

**9) இளவர் என்பவர் யார்? ஒரு இளவர் கூட்டாளியாக இருக்க முடியுமா?**

- 18 வயது நிறையாதவர் இளவர்.
- நீதி மன்றத்தால் ஒரு காப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தால் 21 வயது வரை அவர் இளவராக கருதப்படுகிறார்.
- சட்டப்படி இளவர் ஒருவர் கூட்டாளியாக முடியாது.
- அனைத்து கூட்டாளிகளும் ஒப்புக் கொண்டால் கூட்டாண்மையின் பயன்களுக்கு மட்டும் இளவர் கூட்டாளியாக சேர்த்துக் கொள்ளப்படுவார்.

**10) கூட்டாண்மை கலைப்பிற்கும், நிறுவன கலைப்பிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?**

- கூட்டாண்மைக் கலைப்பு என்பது கூட்டாளிகளின் உடன்பாடு முடிவுக்கு வருவதாகும். ஆனால் தொழில், **கூட்டாண்மை கலைப்பிற்குப் பிறகும் தொடர்ந்து நடைபெறும்.**
- நிறுவனக் கலைப்பு என்பது கூட்டாளிகளுக்கிடையே நிலவும் உறவு முறிந்து விடுதலாகும். **நிறுவனக் கலைப்பினால் கூட்டாண்மைத் தொழில் முடிவுக்கு வந்து விடும்.**

**4. *நிறுமங்கள்* – 1**

## 1. <u>அரசு நிறுமம் என்றால் என்ன?</u>

ஒரு நிறுமத்தில் செலுத்தப்பெற்ற பங்குமுதலில் 51% க்குமேல் மைய அரசோ, மாநில அரசோ, இரண்டும் சேர்த்தோ, மாநில அரசுகள் சேர்ந்தோ வைத்திருப்பின் அந்நிறுமம் அரசு நிறுமம் ஆகும்.

(எ.கா) BHEL., SAIL.

## <u>2. நிறுமச் செயல்முறைகளில் எவை குறித்து குறிப்பிடப்பட்டிருக்கும்?</u>

- செய்முறை விதிகளின் நிறுமத்தின் உள் மேலாண்மைக்குத் தேவையான நடைமுறை விதிகளை காணலாம்.
- இதில் போதிய பத்திரத்தலைகள் ஒட்டியிருக்கும். அமைப்பு முறையில் கையொப்பமிட்ட அனைவரும் இதிலும் கையெழுத்திட வேண்டும்.

## <u>3. குறுமப் பங்கொப்பம் பெறவில்லையெனில் என்ன விளைவு ஏற்படும்?</u>

வெளியிட்ட பங்குகளில் 90% அளவிற்கு குறைந்த பங்கொப்பம் பெறப்படவில்லையெனில்

1. பெறப்பட்ட பணமனைத்தையும் திருப்பித்தர வேண்டும்.
2. பங்கு ஒதுக்கீடு செய்யக் கூடாது.

## 4. கடனீட்டுப் பத்திரம் வரை விலக்கண்ம் தருக.

- ✓ "கடனை ஒப்புக்கொள்ளும் அல்லது கடனை ஏற்படுத்தும் ஒரு ஆவணமே கடனீட்டுப் பத்திரம்".

## 5. வரையறு பொறுப்பு என்றால் என்ன?

- ➢ கூட்டுப் பங்கு நிறுமம் ஒன்றின் உறுப்பினருடைய பொறுப்பு, அவர் வைத்திருக்கும் பங்குகள் மீது செலுத்தப்படாத தொகை அளவிற்கே வரையறுக்கப்பட்டுள்ளது. இது வரையறு பொறுப்பு.

## 6. பங்குமுனைமம் என்றால் என்ன?

- ✓ ஒரு நிறுமம் தன் பங்குகளை முகமதிப்பைவிட அதிகமான விலைக்கு வெளியிட்டால் அது முனைமத்தில் வெளியிட்டதாகப் பொருள்.
- ✓ இது சாதாரணமாக ஒதுக்கீட்டுப் பணத்துடன் வசூலிக்கப்படும்.
- ✓ (எ.கா) ரூ.10. முகமதிப்புடைய பங்கு ரூ.12 க்கு வெளியிடப்படுதல்.

## 7. மீள்தகு கடனீட்டுப் பத்திரங்கள் என்றால் என்ன?

குறிப்பிட்ட காலக்கெடுவுக்குப் பின் (அல்லது) நிறுமம் விரும்பியபோது கடனீட்டுப் பத்திரங்களை நிறுமம் மீட்டுக் கொள்ளக் கூடியதாக இருப்பின், அவை *மீள்தகு கடனீட்டுப் பத்திரங்கள்* எனப்படுகின்றன.

## 8. பங்குகளை வட்டத்தில் வெளியிடுதல் என்றால் என்ன?

- ○ பங்குகள் முகமதிப்பை விட குறைவான தொகைக்கு வெளியிட்டால் பங்குகள் வட்டத்தில் வெளியிடப்பட்டதாகப் பொருள்.
- ○ (எ.கா) ரூ.10. முகமதிப்புடைய பங்கு ரூ.8க்கு வெளியிடப்படுதல்.

## 8. அயல்நாட்டு நிறுமம் என்பதன் பொருள் யாது?

- ➢ வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்டு இந்தியாவில் தொழிலிடம் கொண்டுள்ள நிறுமம் அயல்நாட்டு நிறுமம் எனப்படும்.
- ➢ இந்தியாவின் சட்டங்களே அவற்றிற்கு பொருந்தும்.

# 5.நிறுமங்கள் - II

**1) இயக்குநர்கள் நியமிக்கப்படும் முறைகளைக் குறிப்பிடுக.**

- ❖ நிறும செயல்முறை விதிகளில் பெயர் குறிப்பிட்டு நியமனம் பெறுவர்.
- ❖ அமைப்பு முறை ஏட்டில் கையொப்பமிட்டோர் முதலாம் இயக்குநர்களாகக் கருதப்படுவர்.
- ❖ ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்குநரால் தேர்ந்தெடுப்பர்.
- ❖ இயக்குநரவையே கூடுதல் இயக்குநரை நியமிக்கும்.

**2) சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன?**

- ✓ ஒரு பொது வரையறு நிறுமம் கட்டாயமாக கூட்டவேண்டிய பங்குநர்களின் முதல் கூட்டம் இது.
- ✓ இது நிறும வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே நடைபெறும் கூட்டம்.
- ✓ தொழில் தொடங்க உரிமை பெற்ற 1 மாதத்திற்குப் பின் 6 மாதங்களுக்குள் இக்கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

**3) சட்டமுறை அறிக்கை என்றால் என்ன?**

- ▪ சட்டமுறைக் கூட்டம் கூட்டுவதற்கு 21 நாட்களுக்கு முன்னர் அனைத்து உறுப்பினருக்கும் அனுப்பவேண்டிய அறிக்கையே சட்டமுறை அறிக்கையாகும்.

***4)* சிறப்புப் பொதுக்கூட்டம் எப்பொழுது கூட்டப்படுகிறது?**

- ○ ஒரு அவசரமான அல்லது சிறப்பான பொருள் குறித்த தீர்மானத்தை அடுத்த ஆண்டுப்பொதுக்கூட்டம் வரை தள்ளிப்போட இயலாத நிலையில் இக்கூட்டம் கூட்டப்படுகிறது.

**5) சிறப்புப் பொதுக் கூட்டத்தை யார் கூட்டலாம்?**

- சட்டம் குறிப்பிட்ட அளவு எண்ணிக்கையுள்ளோர் என்று வேண்டுகோள் விடுத்தால் 21 நாட்களுக்குள் இயக்குநர் அவை கூட்டலாம்.
- 45 நாட்களுக்குள் கூட்டத்தை நடத்தவில்லையென்றால், வேண்டுகோளினரே 3 மாதங்களுக்குள் கூட்டலாம்.
- நிறும சட்ட அவையால் கூட்டப்படலாம்.

**6) பகராள் என்றால் என்ன?**

- ஒரு பங்குநர் ஒரு நிறும பொதுக் கூட்டத்தில் தனக்குப் பதில் கலந்து கொள்ள நியமிக்கும் நபர் பகராள்.
- பகராளை நியமிக்கும் பத்திரத்தையும் கூட பகராள் எனும் சொல் உணர்த்தக் கூடும்.

**7) கூட்டத்தில் "குறைவெண்" என்றால் என்ன?**

- ஒரு கூட்டத்தைக் கூட்ட தேவைப்படும் குறைந்த அளவு நபர்களின் எண்ணிக்கை குறைவெண் ஆகும்.
- குறைந்த அளவு நபர்கள் ஒரு கூட்டத்திற்கு வருகை தரவில்லையென்றால், அங்கு கூட்டம் நடந்ததாக கருதப்படமாட்டாது.

**8) நிகழ்ச்சி நிரல் என்றால் என்ன?**

- கூட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் வரிசையே நிகழ்ச்சி நிரல் என்று கூறப்படுகிறது.
- கூட்டத் தலைவருடன் கலந்துரையாடி, நிறும செயலர் நிகழ்ச்சி நிரலைத் தயார் செய்கிறார்.

**9) நிகழ்ச்சிக் குறிப்பேடு என்றால் என்ன?**

- நிறும கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் எடுக்கப் பெற்ற முடிவுகளின் உண்மையான, சரியான பதிவுகளை செய்யும் ஏடே நிகழ்ச்சிக் குறிப்பேடு.
- நிகழ்ச்சி குறிப்பு சுருக்கமாகவும், உண்மையானதாகவும் இருக்க வேண்டும்.
- வர்ணனை வார்த்தைகளற்று எழுதப்பட வேண்டும்.

**10) ஆண்டு பொதுக் கூட்டத்தில் வழக்கமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை?**

1. ஆண்டு கணக்குகள், தணிக்கையர் அறிக்கைகளை விவாதித்தல்.
2. பங்காதாயம் விளம்புதல்
3. இயக்குநர்களை நியமித்தல்.
4. தணிக்கையரை நியமித்து, ஊதியத்தை நிர்ணயம் செய்தல்.

**11) நிறும இயக்குநருக்கு ஏதேனும் தகுதி வரையறுக்கப்பட்டிருக்கிறதா?**

- ✓ தனி நபர்களை மட்டுமே நிறுமத்தின் இயக்குநராக நியமிக்க முடியும்.
- ✓ செயல்முறை விதிகளில் கூறப்பட்டிருப்பின் ரூ.5000 க்கு தகுதிப்பங்குகளை பெற்றிருக்க வேண்டும்.

**12) மாற்று இயக்குநர் என்பவர் யார்?**

- ❖ இயக்குநரவை சாதாரணமாகக் கூடும் மாநிலத்திலிருந்து 3 மாதங்களுக்கு குறையாமல் இயக்குநர் ஒருவர் வெளிச்சென்று இருப்பதால்
- ❖ இயக்குநரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாத நிலையில், மாற்று இயக்குநர் ஒருவரை இயக்குநரவை நியமித்துக் கொள்ளலாம்.

**13) சிறப்புத் தீர்மானம் என்றால் எதைக் குறிக்கும்?**

- சிறப்புப் பொருள் குறித்து நிறைவேற்றப்பட வேண்டியது சிறப்புத் தீர்மானம்.
- நான்கில் மூன்று பங்கு உறுப்பினர்கள் ஆதரித்து இத்தகைய தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும்.

**1. பத்திரம் என்றால் என்ன?**

பத்திரம் என்பது **ஒருவரின் உடைமை உரிமை (பங்கு) அல்லது கடனீட்டு உரிமையை (கடன்பத்திரம்) குறிக்கும் ஒரு சான்றிதழ் அல்லது ஆவணம்.**

**( எ டு)** அரசுப் பத்திரங்கள்

**2. ஒப்புறுதியளித்தல் என்றால் என்ன?**

- ஒரு நிறுவனம் பொதுமக்களுக்கு வெளியிட்ட பங்குகள் முழுவதுமாக எடுத்துக் கொள்ளப்படும் என வாக்குறுதியளிப்பது ஒப்புறுதியளித்தல் ஆகும்.

**3. தகவலறிக்கை என்பது எது?**

- எந்த ஒரு ஆவணம் (சுற்றறிக்கை, விளம்பரம்,) நிறுமத்தின் பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்க பொதுமக்களை அழைக்கிறதோ அவ்வாவணம் தகவலறிக்கை எனப்படுகிறது.

**4. பங்கு மாற்றகத்தின் வரைவிலக்கணம் தருக**

பத்திரங்கள் ஒப்பந்த (ஒழுங்காற்றுச்) சட்டம் 1956–ன் படி *“பங்கு மாற்றகம் என்பது பங்குப் பத்திரங்களை வாங்குதல் அல்லது விற்பனை செய்தல், அவற்றைச் சீர்படுத்துதல், கட்டுப்படுத்துதல் போன்ற நோக்கங்களுக்காக அமைக்கப்பட்ட பதிவு பெற்ற அல்லது அவ்வாறில்லாத நிறுவனம் அல்லது தனிநபர்களின் அமைப்பாகும்”.*

**5. பட்டியலிடுதல் என்றால் என்ன?**

- பங்கு மாற்றகங்களின் அலுவல் பட்டியலில் பத்திரங்களைச் சேர்ப்பதே ‘பட்டியலிடுதல்’ எனப்படும்.
- பட்டியலிடுதல் பொது நிறுமத்திற்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**6. ஆயத்த கொடுப்பு ஒப்பந்தம் என்பதன் பொருள் யாது?**

- ஆயத்த கொடுப்பு ஒப்பந்தங்களில் பத்திரங்களை வாங்கியவர் பணத்தையும், விற்றவர் பத்திரங்களையும் உண்மையாகவே பரிமாறிக் கொள்வர்.
- இவற்றை ***அவ்விடத்திய பேரங்கள்*** என்பர்.

**7. ஊக வாணிகர் என்பவர் யார்?**

- எதிர்காலத்தில் இலாபத்தில் விற்கும் நோக்குடன் பத்திரங்களைத் தற்போது வாங்குபவர்களை ஊக வணிகர்கள் என்று அழைக்கிறோம்.
- இவர்கள் வாங்கிய பத்திரங்களை நீண்டகாலம் வரை வைத்திருக்க மாட்டார்கள். வாங்கும்போதே அவற்றை விற்க எண்ணியே வாங்குவர்.

**8. முதலீட்டாளர் என்பவர் யார்?**

- முதலீட்டாளர்கள் தங்கள் சேமிப்பை இலாபகரமான, வருவாயை ஈட்டித்தரும் பத்திரங்களில் முதலீடு செய்வதற்காகப் பத்திரங்களை வாங்குகின்றனர்.
- பொதுவாக இவர்கள் தாம் வாங்கிய பத்திரங்களை நீண்டகாலம் வரை வைத்திருப்பவர்கள்.

**9. முடவாத்து என்று யாரை குறிப்பிடுவர்?**

- இடர்பாடுகளைத் தீர்ப்பதில் போராடிக் கொண்டிருக்கின்ற ஒரு கரடி ஊக வணிகரே முடவாத்து என்று அழைக்கப்படுகிறார்.
- பின்னர் கொடுப்பதற்காக தற்போது பத்திரங்களை விற்பார்.
- ஆனால் குறிப்பிட்ட நாளில் பங்குகளை வைத்துள்ள எவரும் அதை விற்க விரும்பாததால், மூலையில் முடக்கப்பட்ட நிலையில் இருப்பார்.

**10. ‘போல்ட்’ என்பது யாது? (BOLT)**

- போல்ட் என்பது மும்பை பங்குத் சந்தையில் மார்ச் 1995 முதல் நடைமுறையில் உள்ள ஒரு வணிகச் செயல்பாடாகும்.
- உலக நாடுகளில் பங்கு வணிகத்திற்காகப் பின்பற்றப்பட்டு வரும் கலப்பின பலதரப்பட்ட வணிகமுறையில் ஒன்றாகும்.

Prepared by K.VENKATESA RAVI & G.BASKER PG Asst (com)

**1. கூட்டுறவு அமைப்பு– வரையறு?**

H.C. கால்வேர்ட் அவர்களின் கூற்றுப்படி, *“கூட்டுறவு சங்கம் என்பது உறுப்பினர்களின் பொருளாதார நலனைப் பெருக்கிக் கொள்வதற்காக, மனிதர் என்ற முறையில் சமத்துவ அடிப்படையில், மக்கள் அவர்களாகவே ஒன்றுபடும் அமைப்பே கூட்டுறவு”.*

**2. இராக்குடேல் முன்னோடிகள் என்பவர் யார்?**

- ➢ இராபர்ட் ஓவன் என்பவர் முதல் கூட்டுறவு இயக்கத்தை இங்கிலாந்தில் 1844–ஆம் ஆண்டு 28 உறுப்பினர்களுடன் இராக்குடேல் என்ற பெயரில் தொடங்கினார்.
- ➢ இது முதன்முதலில் தொடங்கிய நுகர்வோர் கூட்டுறவு சங்கமாகும்.
- ➢ இராபர்ட் ஓவன் என்பவர் இந்த இயக்கத்தின் தந்தையாகக் கருதப்படுகிறார்.

**3. ‘ஒருநபர் ஒரு வாக்கு’ என்பதன் பொருள் யாது?**

- ❖ கூட்டுறவு அமைப்பில் உறுப்பினர் மூலதனப் பங்குத் தொகையாக எவ்வளவு செலுத்தியிருந்தாலும்,
- ❖ அதாவது எத்தனை பங்குகள் வைத்திருந்தாலும்
- ❖ மனிதன் என்ற முறையில் சமத்துவ அடிப்படையில் அவருக்கு ஒரு வாக்கு மட்டுமே உண்டு.

**4. தனக்குத்தானே உதவி, பரஸ்பர உதவி என்பதன் முக்கியத்துவம் யாது?**

- ✓ கூட்டுறவின் சங்கத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் தனக்குதானே உதவி செய்து கொள்ள வேண்டும்.
- ✓ இது சுய உதவி அல்லது தனக்குத்தானே உதவி எனப்படும்.
- ✓ மேலும் பிறருக்கும் உதவி செய்ய வேண்டும் இது பரஸ்பர உதவி எனப்படும்.

**5. கூட்டுறவு சங்கத்தின் நோக்கங்கள் யாது?**

- ➢ ‘ஒவ்வொருவரும் அனைவருக்காக, அனைவரும் ஒவ்வொரு வருக்காக’ என்பது அதன் சித்தாந்தம்.
- ➢ பொது நோக்கத்திற்காகப் பிறருடன் இணைந்து பணியாற்றுதலே கூட்டுறவின் முக்கிய மற்றும் முதன்மை நோக்கம் ஆகும்.

**6. கூட்டுறவு சங்கத்தின் ஏதேனும் நான்கு சிறப்பியல்புகளைக் கூறு.**

| | |
|---|---|
| 1. தன்னிச்சையாகச் சேரும் சங்கம் | 2. சமத்துவம் |
| 3. மக்களாட்சி முறையில் மேலாண்மை | 4. உள்ளூர் உறுப்புமை |
| 5. முதலுக்கு சொற்ப வருவாய் | 6. பரஸ்பர உதவி |

**7. ஆதரவுப் பங்காதயம் என்றால் என்ன?**

- ▪ ஒரு உறுப்பினர் கூட்டுறவு நுகர்வோர் சங்கத்தை எந்த அளவு பயன்படுத்திக் கொள்கிறாரோ அந்த அளவிற்கு அதன் உபரியிலும் பங்கு பெறுவார்.
- ▪ இதுவே ஆதரவு பங்காதாயம் (அ) **புரவு பங்காதாயம்** எனப்படுகிறது.
- ▪ இது உறுப்பினர்கள் கூட்டுறவு அமைப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ள தூண்டுகோலாக அமைகிறது.

**1) நாட்டுடமையாக்கம் என்றால் என்ன?**

- ஏற்கெனவே தனியார் துறையில் இயங்கிவரும், தனியாருக்குச் சொந்தமான தொழில் மற்றும் வணிக அமைப்புகளை
- பொதுமக்கள் நலனுக்காக, அரசு ஏற்று நிருவகிக்கும் பொறுப்பை மேற்கொள்வதே **நாட்டுடமையாக்கம்** அல்லது **தேசியமயமாக்கம்** என்று பெயர்.

**2) அரசு தொழில் என்பதின் வரைவிலக்கணத்தைக் கூறுக.**

**S.S. கேரா**வின் கூற்றுப்படி, *"மத்திய அல்லது மாநில அரசுகள் தனியாகவோ அல்லது தனியார் துறையுடன் கூட்டாகவோ உற்பத்தி, வணிகம் போன்ற தொழில்களில் ஈடுபடலாம். சுய நிறைவு மேலாண்மையை பெற்றுள்ள அத்தகைய தொழில்களை அரசுத் தொழில்கள் எனலாம்".*

**3) இராணுவம் சார்ந்த தொழில்களுக்குத் துறைமுறை அமைப்பே சிறந்ததென எதனால் கூறப்படுகிறது?**

- இராணுவம் சார்ந்த தொழில்கள் நாட்டுப் பாதுகாப்பு சார்ந்த தொழிலாகும் எனவே இது மிக இரகசியமாக நடத்தப்பட வேண்டும்.
- மேலும் கொள்கைகள், செயல்பாடுகளை மிக இரகசியமாக பாதுகாக்க வேண்டும். அரசு துறைவாரி அமைப்பே இரகசியம் காக்க சிறந்த வடிவமைப்பாகும்.

**4) பொதுக் கழகத்தின் மேலாண்மை பற்றி குறிப்பிடுக**

- பொதுக் கழகங்கள் இயக்குநரவையால் மேலாண்மை செய்யப்படுகிறது.
- தகுதி, திறமை, அனுபவம் கருதி இயக்குநர்கள் அரசால் நியமிக்கப்படுகிறார்.
- இதனால் சமுதாய நலன் காக்கப்படுகிறது.

**5) பொதுக் கழகத்திற்கு 4 எடுத்துக் காட்டுகளைத் தருக. (அ)**

***பொதுக் கூட்டுருவிற்கு 4 எடுத்துக் காட்டுகளைத் தருக.***

இந்திய ரிசர்வ் வங்கி, இந்தியதொழில் நிதி கழகம்

அரசு வணிகக்கழகம், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம்(**LIC**).

**6) துறைமுறை (**அரசு துறைவாரி **) அமைப்பிற்கு 4 எடுத்துக் காட்டுகளைத் தருக.**

ரயில்வே, தொலைபேசி, தொலைக்காட்சி, தந்தி

Prepared by K.VENKATESA RAVI & G.BASKER PG Asst (com)